**செய்தி வெளியீடு எண்: 263** **நாள்: 17.04.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு உச்சநீதிமன்றம் பட்டியல் இன மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளின் விசாரணையில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் குறித்து சமீபத்தில் சில ஆணைகள் பிறப்பித்தது. இந்த ஆணைகள் குறித்து பரிசீலினை செய்ய இன்று (17.4.2018) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பட்டியலின மற்றும் பழங்குடி இனத்தவரின் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து தமிழ்நாட்டின் சார்பாக சீராய்வு மனு தாக்கல் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆணையிட்டார்கள். இச்சீராய்வு மனுவினை மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு உடனடியாக தாக்கல் செய்யவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலெட்சுமி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு தலைமை வழக்குரைஞர் திரு.விஜய் நாராயண், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.மணிவாசன், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.தே.க. ராஜேந்திரன், இ.கா.ப., சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு.கே.சி. மகாலி, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9